

# திறவுகோல்

2057
புரட்டாசி
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# எனக்கு ஒரு கனவு உண்டு...

*மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் - ஒரு இனத்தின் விடிவெள்ளி*

*விடியல் வேண்டிக் காத்திருந்த விழி*

*உமிழ்ந்தது இனத்தின்கண்ணீர்த் துளி*

*அதுபட்டுக் கறுப்பாய் பிறந்தது ஒரு நெருப்பு*

*நீறு பூத்த அணையா நெருப்பு*

*அதன் பெயர் மார்ட்டின் லூதர் கிங்!*

*அடிமைச் சங்கிலியை உடைக்க அவன் சம்மட்டி எடுக்கவில்லை,*

*வார்த்தைகளைத் தூக்கினான்!*

*இரத்தம் சிந்தாமல் இதயங்களைத் திறந்தான் ...*

*"கறுப்பு என்பது சாபமல்ல,*
*கடவுள் தீட்டிய ஓவியம்..."*

*உலகுக்கு உரக்கச் சொன்னவன் - நடந்த பாதையே ஒரு புரட்சி!*

## *1. இருளில் ஒரு மின்னல்*

*அமெரிக்கா என்னும் அந்த மாபெரும் தேசம், சுதந்திரத்தின் சிலையை நெஞ்சில் சுமந்து கொண்டே, லட்சக்கணக்கான கறுப்பின மக்களை விலங்கிட்டு வைத்திருந்தது.*

*அடிமைத்தனம் என்னும் இருள் ஒழிந்தும், அதன் நிழல் இன்னும் தெருக்களிலும், பள்ளிகளிலும், பேருந்துகளிலும், மனிதர்களின்*




*மனங்களிலும் படர்ந்திருந்தது. இதுவே "ஜிம் க்ரோ சட்டங்கள்" என்னும் பெயரில் சொந்த மக்களின் மீது தொடுக்கப்பட்ட இன வேறுபாட்டுப் போர்.*

*இந்த இருளின் நடுவே வெட்டியது ஒரு மின்னல். 1929ஆம் ஆண்டு ஜனவரி பதினைந்தாம் நாள், ஜார்ஜியா மாநிலம் அட்லாண்டா நகரில், ஒரு கருப்புக் குழந்தை பிறந்தது நெருப்பாய் !*

*அவனுக்கு முதலில் இட்ட பெயர் மைக்கேல்..., பின்னாளில் அவன் தந்தை அவனை மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் என அழைத்தார்.*

*சபை போதகர் ஒருவரின் மகனாய், இறையியலின் மடியில் வளர்ந்த அந்தச் சிறுவனுக்கு, சின்ன வயதிலேயே ஒரு*

உண்மை புலப்பட்டது - வெள்ளையனும் கறுப்பனும் ஒரே வானின் கீழ் வாழ்ந்தும், ஒரே உரிமைச் சூரியனின் வெளிச்சத்தைப் பெற முடியாத அவலம்!

பள்ளிக்குச் சென்ற தன் நண்பனை,

'நீ வெள்ளையர் பள்ளிக்குச் செல்ல முடியாது'

என்று பிரித்தபோது, அவன் இதயத்தில் முதன் முதலாக பொறி பறந்தது. அந்தப் பொறி, பின்னாளில் ஓர் இனத்தையே விடுவிக்கும் தீயாக மாறியது. போஸ்டன் பல்கலைக்கழகத்தில் இறையியல் பயின்று, முனைவர் பட்டம் பெற்ற அவன், அமெரிக்காவின் ஆன்மாவை உலுக்கும் குரலாக உருவெடுக்க இன்னும் சில ஆண்டுகளே மிச்சமிருந்தன.

## 2. ஒரு பேருந்தில் பொங்கிய புரட்சி

1955ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், அலபாமா மாநிலம் மான்ட்கோமெரி நகரில், ரோஸா பார்க்ஸ் என்னும் ஒரு தையல் தொழிலாளி பெண், பேருந்தில் தன் இருக்கையை ஒரு வெள்ளையருக்கு விட்டுக் கொடுக்க மறுத்தார்.

அந்த ஒரு 'மறுப்பு' - அது ஒரு பெண்ணின் ஒருநாள் உழைப்பின் பிந்தைய சோர்வின் முடிவல்ல ; அது ஒரு இனத்தின் நூற்றாண்டுகளின் அடிமைச் சோர்வின் ஆங்கார வெடிப்பு!

அவரைச் சிறையில் அடைத்தார்கள் வழக்கத்தை மீறினாள் என்று ! ஆனால் அந்தச் சிறைக் கதவு, ஓர் இயக்கத்தின் வாசலைத் திறந்தது.

இருபத்தாறு வயதே நிரம்பிய இளம் போதகர் மார்ட்டின் லூதர் கிங், மான்ட்கோமெரி முன்னேற்ற சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான் .

அன்று இரவே, தேவாலயத்தில் திரண்ட மக்கள் முன் அவன் நின்று பேசினான். அவன் குரல் நடுங்கவில்லை; அது இடி முழக்கமாய் ஒலித்தது.

‘நீதி வெள்ளமாய் பாயட்டும்,
நியாயம் தலை நிமிரட்டும். அதுவரை
பேருந்தைப் புறக்கணிப்போம்.’

என்று அவன் சொன்னபோது, அந்த மக்கள் கூட்டம் ஒரே சொல்லில் எழுந்து நின்றது. 381 நாட்கள் - ஒரு வருடத்திற்கும் மேலாக - கறுப்பின மக்கள் பேருந்தில் ஏறாமல் நடந்தே சென்றார்கள். கால்கள் வலித்தன, ஆனால் மனம் வலிமை பெற்றது.

‘என் கால்கள் சோர்ந்து விட்டன,
ஆனால் என் ஆன்மா வென்று விட்டது’

ஒரு முதியவள் முணுமுணுத்த அந்த வரி, வரலாற்றில் பொறிக்கப்பட்ட ஒரு கவிதை.

தொடர்ந்தது போராட்டம். தள்ளாடின பொருள் இழப்பில் பேருந்து நிறுவனங்கள். குவிந்தன முறையீட்டு வழக்குகள்.

1956இல் அமெரிக்க உச்சநீதிமன்றம், பேருந்துகளில் இனப் பாகுபாடு சட்டவிரோதம் என்று தீர்ப்பளித்தது. ஒரு பெண்ணின் மறுப்பும், ஓர் இனத்தின்

பொறுமையும், ஓர் இளைஞனின் குரலும் சேர்ந்து, முதல் வெற்றிக் கொடியை நாட்டின.

## 3. அகிம்சை ஆயுதம்

கிங்கின் கையில் துப்பாக்கியில்லை... ஆனால் அவனிடம் இருந்தது - காந்தியிடமிருந்து கற்ற அகிம்சை.

வன்முறையால் வெல்பவன், தற்காலிகமாய் வெல்கிறான்; அன்பால் வெல்பவன், நிரந்தரமாய் வெல்கிறான்

என்பது அவன் நம்பிக்கை.

அவனுடைய போராட்ட உத்தி மூன்று தூண்களில் நின்றது:

அமைதியான எதிர்ப்பு,

சட்டவிரோத ஆணைகளை மீறும் சிவில் மறுப்பு,

பாதிக்கப்பட்டவனே, பாதித்தவன் மீது அன்பைச் சுரக்கும் தார்மீக துணிச்சல்.

அடி வாங்கினான், சிறையில் தள்ளப்பட்டான், வீட்டின் மேல் குண்டு வீசப்பட்டது - ஆனாலும் அவன் விழி சிவக்கவில்லை; பழி தீர்க்கவில்லை.

'இருளால் இருளை ஓட்ட முடியாது, ஒளியால் மட்டுமே முடியும்; வெறுப்பால் வெறுப்பை ஓட்ட முடியாது, அன்பால் மட்டுமே முடியும்'

என்பது அவனுடைய தத்துவத்தின் இதயதுடிப்பு.

இது பலவீனத்தின் அறிகுறியல்ல; இது வலிமையின் உச்சம். அடிபட்டவன் திரும்பி அடிக்காமல் நிற்பதற்கு எத்தனை மன உறுதி வேண்டும்!

சிறையின் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் இருந்தபடியே, பர்மிங்காமில் அவன் எழுதிய கடிதம் ('Letter from Birmingham Jail') "பர்மிங்ஹாம் சிறையிலிருந்து ஒரு கடிதம்". அது நீதிக்கான தாமதமே நீதி மறுப்பு என்று உலகுக்கு உணர்த்தியது. அதுவே வரலாற்றுச் சிறப்பு மிக்க நம் நாட்டு இன்றைய பல தீர்ப்புகளின் தாய்.

"அமைதியை வாங்க அநீதியை சகித்துக் கொள்பவனை விட, அமைதியை உடைத்தேனும் நீதியை நிலைநாட்டுபவனே உண்மையான அமைதியாளன் ..."

என்பது அவன் நிலைப்பாடு.

## 4. குழந்தைகளின் சிலுவைப் பயணம்

1963ஆம் ஆண்டு, பர்மிங்காம் நகரம் அமெரிக்காவின் மிக இருண்ட நகரங்களில் ஒன்றெனப் பெயர் பெற்றிருந்தது.

அங்கு போராடிய குழந்தைகள் மீது, காவலர்கள் நாய்களை ஏவினார்கள், நீர்த் தாரைகளை பாய்ச்சினார்கள். சிறு பிஞ்சுகள் தெருவில் நனைந்து, இழுத்துச் செல்லப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டன.

அந்தக் காட்சிகள் தொலைக்காட்சிகள் வழியே உலகம் முழுவதும் ஓடின. மனித மனசாட்சி நடுங்கியது. இரும்பு இதயம் கொண்ட அரசுகூட, குழந்தைகளின்

அழுகுரலுக்கு முன் வளைந்தது. கிங் சொன்னான்:

'எங்கேயேனும் ஒரு மூலையில் நடக்கும் அநீதி கூட... எங்கும் உள்ள நீதிக்கு அச்சுறுத்தல்தான்.

ஒரு நகரின் வலி, ஒரு தேசத்தின் வெட்கமாய் மாறிய தருணம் அது.

இந்தப் போராட்டமே, கருப்பின மக்களின் சிவில் உரிமைச் சட்டத்திற்கான (Civil Rights Act) அடித்தளத்தை அமைத்தது. வேதனை வீணாகவில்லை; அது விதையாக விழுந்து, மாற்றத்தின் மரமாய் வளர்ந்தது.

## 5. எனக்கொரு கனவு உண்டு

**1963**, ஆகஸ்ட் இருபத்தி எட்டாம் நாள். வாஷிங்டன் நகரின் லிங்கன் நினைவகத்தின் படிக்கட்டுகளில், இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். வெள்ளையரும் கறுப்பரும், கிழவரும் இளைஞரும், ஒரு காந்தக் குரலைக் கேட்கக் காத்திருந்தனர்.

அந்த நேரம், மார்ட்டின் லூதர் கிங் மைக்கின் முன் நின்றான். அதிர்ந்தது ஆபிரகாம் லிங்கனின் நினைவகம்...

எழுதித் தயாரித்த உரையின் கரை உடைத்தது அவன் காட்டாற்றுப் பேச்சு. அது இதயத்தின் ஆழத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய பூகம்பம். பேசத் தொடங்கினான்:

'எனக்கொரு கனவு உண்டு.'

அந்த வரி, ஒரு புலியின் உறுமலாய்... ஒரு கனவின் வார்ப்படமாய்..., ஒரு போர்



வீரனின் எச்சரிக்கையாய் ஒலித்தது.

அடிமைகளின் பேரப்பிள்ளைகளும், அடிமை உரிமையாளர்களின் பேரப்பிள்ளைகளும், ஒரே மேசையில் சகோதரத்துவத்தின் உணவை பகிர்ந்துண்ணும் நாளை அவன் மனக் கண்ணில் கண்டான்.

'என் பிள்ளைகள் ஒரு நாள், தங்கள் தோலின் நிறத்தால் அல்ல, தங்கள் குணத்தின் திறத்தால், திறமையின் சிறப்பால் மதிப்பிடப்படும் ஒரு தேசத்தில் வாழ்வார்கள்'

என்று அவன் சொன்னபோது, லட்சக்கணக்கான கண்கள் கண்ணீரால் நிரம்பின.

அது வெறும் உரையல்ல; அது ஒரு இனத்தின் நெஞ்சில் புதைந்திருந்த ஆசையின் வெளிப்பாடு. ஏக்கங்களைத் தட்டி எழுப்பிய புரட்சியின் புறப்பாடு.

'ஒலிக்கட்டும் விடுதலை... ஒலிக்கட்டும் விடுதலை... என்று ஒவ்வொரு குன்றிலிருந்தும், அவன் காற்றுக்குக் கட்டளை இட்டான். அந்த ஒலி, அமெரிக்காவின் ஒவ்வொரு மூலையிலும்

எதிரொலித்து, உலகின் ஒவ்வொரு விடுதலைப் போராட்டத்திற்கும் ஒரு கீதமாய் ஆனது.

## 6. இரத்தம் சிந்திய ஞாயிறு

*1965 மார்ச் மாதம், அலபாமாவின் செல்மா நகரிலிருந்து மான்ட்கோமெரி நோக்கி, ஒரு அமைதிப் பேரணி முழக்கமிட்டது...*

*- கருப்பு விரலுக்கும் வேண்டும் வாக்குரிமை... "மை"*

*அணிவகுப்பாளர்களைத் தடுத்து, ருசி பார்த்தது எட்மண்ட் பெட்டஸ் பாலத்தில் காவலர்களின் தடி. பாலத்தின் அடியில் ஓடியது தண்ணீர்; பாலத்தின் மேலே ஓடியது செந்நீர்.*

*அந்த நாள் 'இரத்தஞ் சிந்திய ஞாயிறு' என்று வரலாற்றின் கறையானது.*

*தலைகள் உடைந்தன, எலும்புகள் முறிந்தன, ஆனால் மனம் முறியவில்லை. கிங் மீண்டும் அழைப்பு விடுத்தான்...*

*இந்த முறை, தேசமே அவனுடன் நடந்தது. மதகுருமார், ரப்பிகள், சாதாரண தொழிலாளர்கள், மாணவர்கள் - அனைவரும் இணைந்தனர் எறும்புகளாய்... அவன் காட்டிய திசையில் .*

*'நாம் எத்தனை காலம் காத்திருக்க வேண்டும்?'*
*அவன் கேட்டபோது,*

*'இல்லை!... இனி இல்லை!'*

*என்ற பேரொலி பதிலிறுத்தது.*

*இந்த போராட்டமே 1965ஆம் ஆண்டு வாக்குரிமைச் சட்டத்தை (Voting Rights Act) பிறப்பித்தது.*

*ஒரு பாலத்தில் சிந்திய இரத்தம், ஒரு தேசத்தின் வாக்குப் பெட்டியைத் திறந்தது.*

## 7. மலை உச்சியிலிருந்து...

*1968, ஏப்ரல் மூன்றாம் நாள் இரவு, மெம்பிஸ் நகரில், துப்புறவுத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாகப் பேசிய கிங், அந்த உரையின் இறுதியில் ஒரு விந்தையான முன்னுணர்வுடன் பேசினான்:*

*'நான் உங்களுடன் இணைந்து மலை உச்சிவரை வந்துவிட்டேன். உங்களுடன் சேர்ந்தே நம் இலக்கிற்கு நான் செல்ல முடியாமல் போகலாம். ஆனால் ஒருநாள்... ஒரு நாள் நான் இல்லாமற் போனாலும், நாம் ஒரு இனமாக அந்தப் பொன்னுலகத்தை நிச்சயம் அடைவோம் என்பதை இன்று இரவு பிரகடனம் செய்ய விரும்புகிறேன்'*

*மறுநாள் மாலை, ஏப்ரல் நான்காம் தேதி, லோரைன் மோட்டலின் பால்கனியில் நின்றிருந்த அவன் மீது, ஒரு தோட்டா பாய்ந்தது.*

*கறுப்பின மக்களின் விடுதலைக்காக முழங்கிய அந்த குரல், ஒரே ஒரு தோட்டாவால் ஒரே ஒரு உலோகத் துண்டால் நிசப்தமானது. ஆனால் உயிரைத் துளைத்த அந்தத் தோட்டாவால் அவனுடைய கனவைத் துளைக்க முடியவில்லை.*

அவன் உடல் மண்ணுக்குள் புதைந்தது, ஆனால் அவன் முழக்கங்கள் புதையவில்லை. காற்றில் கலந்து, இன்றும் உலகின் ஒவ்வொரு இனத்தின் போராட்டக் களத்திலும் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

'மனிதனை அவன் இறுதி நாளால் அல்ல, அவன் வாழ்ந்த வாழ்க்கையால் நினைவு கூறவேண்டும்'

கருப்பின உரிமைப் போரில் கிங் வாழ்ந்த முப்பத்தொன்பது ஆண்டுகள், மூவாயிரம் ஆண்டுகளுக்குச் சமமான வெளிச்சத்தைப் பாய்ச்சின .

## 8. அணையாத தீ

இன்று, அமெரிக்காவின் தெருக்களில், பள்ளிகளில், அரசவைகளில், ஜனாதிபதி மாளிகையில் கூட, கருப்பின மக்கள் நிமிர்ந்து நடக்கிறார்கள். அந்த ஒவ்வொரு கம்பீர கறுப்புக் காலடியிலும், மார்ட்டின் லூதர் கிங்கின் , போராட்டத்தால் காய்த்துப் போன காலடித் தடம் பதிந்திருக்கிறது.

அவன் ஒரு மனிதனாய் பிறந்தான், ஆனால் ஒரு இயக்கமாய் மறைந்தான்.

அவன் காட்டியது வெறும் போராட்ட உத்தியல்ல; அது ஒரு தத்துவம் -

வெறுப்பை அன்பால் வெல்லலாம், இருளை ஒளியால் விரட்டலாம், அநீதியை அமைதியாலும் அசைக்க முடியாத துணிச்சலாலும் வீழ்த்தலாம் .

அவன் ஏற்படுத்திய அலை, இன்று உலகெங்கும் சுதந்திரத்திற்காகவும், சமத்துவத்திற்காகவும் குரல் கொடுக்கும் ஒவ்வொரு இயக்கத்திலும் பேரலையாய் வீசுகிறது .

தமிழ் மண்ணிலும் இதே தீ பல வடிவில் விடுதலைக்காகவும் தமிழுக்காகவும் சமத்துவத்திற்காகவும் எரிந்திருக்கிறது.

மொழி வேறு, நிலம் வேறு, ஆனால் நீதிக்கான தாகம் ஒன்றே!
அடக்குமுறைக்கு எதிரான குரல் எந்த மொழியில் எழுந்தாலும், அது ஒரே சுரத்தில் ஒலிக்கிறது - விடுதலை என்னும் சுரத்தில்.

கடலைத் தாண்டியும், காலத்தைத் தாண்டியும், கிங்கின் கனவு இன்று நம் நாட்டு இளைஞர்களுக்கும் ஒரு பாடமாகிறது. சாதி, மத, நிற வேறுபாடுகளைக் கடந்து, ஒவ்வொரு மனிதனும் தன் திறமையால் மட்டுமே அளக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு தேசிய இனத்தின் உரிமையும் மதிக்கப்பட வேண்டும் என்ற அவனுடைய கனவு, உலகின் எந்த மூலையிலும் பொருந்தும் ஒரு நித்திய உண்மை . இதுவே அவனுடைய வாழ்க்கையின் மகத்தான பாடம் .

## 9. வரலாற்றில் பொறிக்கப்பட்ட நெருப்பெழுத்துகள்.

கிங்கின் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு வாளின் கூர்மை கொண்டது, ஒரு மலரின் மென்மையும் கொண்டது. அவனுடைய சில சிந்தனைகளின் இதயத் துடிப்பு இதோ:

“இருளால் இருளை விரட்ட முடியாது; ஒளியால் மட்டுமே அது சாத்தியம்.”

“மனிதனின் மேன்மை அளக்கப்படுவது, வசதியான காலங்களில் அவன் நிற்கும் இடத்தால் அல்ல; சவால் நிறைந்த காலங்களில் அவன் நிற்கும் இடத்தால்தான்.”

“நம்மை உலுக்கும் விடயங்களில் நாம் எப்போது எதிர்க்காமல் மௌனம் காக்கிறோமோ, அக்கணமே நாம் மரணித்து விடுகிறோம்”.

“நீதி உலகின் எந்த ஒரு மூலையில் மறுக்கப்பட்டாலும்,
அது எல்லா இடங்களிலும் உள்ள நீதிக்கு அச்சுறுத்தலே.”

“நம்பிக்கை என்பது, படிக்கட்டு முழுவதையும் பார்க்காமலேயே... முதல் படியில் காலெடுத்து வைப்பதுதான்.”

“இறுதியில் நினைவில் நிற்பது, எதிரிகளின் வார்த்தைகள் அல்ல; நண்பர்களின் மௌனம்தான்.”

## 10. போராட்ட உத்திகள் - அமைதியின் ஆயுதக் களஞ்சியம்.

கிங் கையாண்ட உத்திகள், வெறும் முழக்கங்கலல்ல; அவை நுட்பமாகத் திட்டமிடப்பட்ட, ஆழமான தத்துவம் கொண்ட அறப் போராட்ட வழிமுறைகள் ; ஒவ்வொரு அடிமைப்பட்ட தேசிய இனங்களுக்குமான அமைதி வழி திசைகாட்டிகள்.

புறக்கணிப்பு (Boycott)

மான்ட்கோமெரியில் பேருந்தைப் புறக்கணித்தது போல், அநீதியான அமைப்புகளுக்கு பொருளாதார அடி கொடுத்தல்.

அமைதி அணிவகுப்பு (Peaceful March)

வாஷிங்டன், செல்மா போன்ற பேரணிகள் மூலம், உலக கவனத்தை ஈர்த்தல்.

சிவில் மறுப்பு (Civil Disobedience)

அநியாயச் சட்டங்களை அமைதியாக மீறி, விளைவை ஏற்றுக்கொள்ளும் தார்மீக துணிச்சல்.

அமர்ந்து போராடும் உத்தி (Sit-ins)

வெள்ளையருக்கு மட்டுமான உணவகங்களில் அமர்ந்து, அமைதியாக எதிர்ப்பு தெரிவித்தல்.

ஊடக விழிப்புணர்வு

தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கைகள் வழியே, அநீதியின் கொடூரத்தை உலகிற்குக் காட்டி மனசாட்சியை உலுக்குதல்.

கூட்டமைப்பு அரசியல்

மதகுருமார், தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள் என சமூகத்தின்

பல்வேறு தரப்பினரையும்
ஒன்றிணைத்தல்.

## இறுதி முழக்கம்

இரவெல்லாம் அழுத கண்கள் இன்று
சிரிக்கின்றன.

விலங்கிட்ட கைகள் இன்று வாக்குப்
பதிவு செய்கின்றன.

'கறுப்பு பேரழகு என்று முழங்கிய அந்த
மனிதன் -

இன்று ஒவ்வொருவர் நெஞ்சிலும்
சிவப்புச் கதிரவனாய்...

கிங்! நீ இறக்கவில்லை,

நீ ஒவ்வொரு போராட்டக் குரலிலும்
வாழ்கிறாய்,

நீ ஒவ்வொரு நீதிக்கான கனவிலும்
மூச்சுவிடுகிறாய்,

நீ அணையாத தீ,

நீ முடிவில்லா விடியல்!

"எனக்கொரு கனவு உண்டு"
என்ற அந்த பாடல்
இன்றும் ஒலிக்கிறது
காலத்தின் நெஞ்சில் -

ஒலிக்கட்டும் விடுதலை...
ஒலிக்கட்டும் விடுதலை...
ஒவ்வொரு மண்ணிலும், ஒவ்வொரு
மனிதனிலும்!

—

ஐயா. இலரா மோகன்,
மன்னார்குடி.



# சிந்தையில் புகுந்தே

சிறிதேனும் விலகாமல்
நீக்கமற குடிபுகுந்தே
எந்தையும் தாயும் போல்
எப்போதும் எனை ஆட்கொள்ளும்
செந்தில் வேலனின் தரிசனம்
பார்த்திடவே
விரதமிருந்து மாலையணிந்து
விசுக்கென்றே அலகு குத்தி
வெறுங்காலில் நடை நடந்து
அடைந்திட்ட ஆலயத்தில்
ஆயிரம் நான்கினுக்கே
ஆண்டவனைக் கடத்திவந்து
அமைச்சருக்காய் தரிசனம் காட்டுமென
அர்ச்சகரும் அர்ச்சிக்கும் வேளையிலே
வரிசையில் நின்றிருந்தே
வாசலை நோக்குமெந்தன் விழிக்குள்ளும்
வரவேயில்லை
வாரமாகிப்போயும்
வாசல் தாண்டிப் போன கடவுள்.
வழிவழியாய் வரம் கொடுத்தே
மனமெல்லாம் களைத்துவிட
நாளெல்லாம் கால்கடுக்க வேலேந்தி

நின்றதன்
வேதனை வாட்டையிலே
கழுத்திலும் காதிலும் கணக்கற்ற
வஸ்துக்களைத்
தாங்கி நின்ற தடுமாற்றத்திலும்
கருவறையின் இருட்டுக்குள்
தனித்திருக்கும் இரவுகளில்
தன்னைத்தான் நினைத்தே
விழி நீரில் நனைந்து விடும்
ஆற்றாமை நிறைகையிலே
வழி மறந்து
வழுவழுப்பின் இருக்கையிலே
குளிருக்குள் உறங்கிப்போன
மனிதனைப் போல
மாறிவிட்ட
கடவுளைத் தேற்றிடவே
மொழியற்றே
திரும்புகிறேன் வாசல் வரிசைக்கு.

## உடலெங்கும் பெருகியோடும்

வியர்வை நதியின்
ஓயாத் தீண்டலை
ஒதுக்கி விடுமென
தேடித்தேடி நில்லா இடம் விட்டு
நிழலென்ற அமுதத்தை நேசமென
விரியவைக்கும்
கிளை பரப்பிக் கிடந்த
மரத்தின் கீழே
பாதையின் ஓவியத்தில் பகலிரவாய்
உழைப்பைக் கூட்டி
தன்னையே கரைத்துவிட்ட
யாசகனைப் போலவே
பலனைத் தேடாத பக்தனென
நின்றுவிட்ட நிலையில்
ஆடாமல் அசையாமல்
வேடிக்கை பார்க்கத் துவங்கியது
கிளைக் கண்ணிலிருந்து மரம்.
நின்றுவிட்ட இயக்கத்தின்
நீள் கதையைச் சொல்லிச் செல்லும்
முனைப்புடன்
காற்றின் தீண்டலற்றுக் கிடக்கும்
கிளையெங்கும் கதிரோனின்
கையெழுத்துப் பிரதிகள்.
உள்வாங்கும் காற்றைத் தேடி
விரியத் துவங்கும் இலைத்துளையின்
பாதைகளில்
எழுந்து நிற்கின்றன வெயிலின்
விரிகதிர்கள்.
கூடிக்கூடி விரட்டினாலும்
ஓடிப்போகாத உள்ளன்பின்
வீரியத்தில்
புன்னகை விரிந்தே
புத்தனாகிவிட்ட மலர்களின்
இருப்பிலிருந்து
ஒரு பூவேனும் உதிரட்டுமென்றே
காத்திருக்கும் மண்ணோடு
நானும் மூச்சு விடுகிறேன்
நகரத்தில் நிற்கும்
ஒற்றை மரத்தைப் பார்த்து.

- இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# உன் காலடி ஓசையிலே காதல் ?

உள்ளத்தின் திறவுகோலின்
உறைவிடம் நெஞ்சத்திலே...
உன்னை ஏந்திய
உதயம் அறிவாயோ?

மௌனமொழியில் விழியாலா
மௌனங்களைச் சந்திக்கிறாய்...

நானொரு பாதி
நாட்களின் மீதியில்
நாலடி நடக்கையில்
நானே மிதக்கிறேனோ?

மென்மலராய் விரிந்த
மேக்கூட்டத்தில் பறக்கிறேனா?
மேலாடையோ பாலாடையாய்
மேனியிலே சிலிர்க்கிறதோ?

இன்பம் தங்கும்
இடங்கள் நந்தவனம்
இன்றே அதுதான்
இருவரின் அந்தரங்கம் ....

- கவிமணி இரஜகை நிலவன்,
மும்பை,
கைப்பேசி: 9920454827

---

# அதற்கும் முன்னே...

நம்மின்

சந்தோஷங்களை
சாதனைகளை
கணிப்பை
ஆற்றலை
பகிர்ந்தால்
நாளையவற்றுக்கு
நம்பிக்கை
கொடுக்கும் தான்

இழப்பை
சோகத்தை
ஏமாற்றத்தை
வேதனையை
பகிர்ந்தால்
மனது இலேசாகும்
தான்

ஆனால்
அதற்கு முன்னே

செவி கொடுப்பவருக்கு
கேட்க நேரம் இருக்கிறதா
விருப்பம் உண்டா
உணர்பவரா
இறுதியாய்
ஆனால் மிக முக்கியமாய்
கேட்கும் மனநிலையில்
இருக்கிறரா

என்பதை அறிவோம்..

## எல்லா காலங்களிலும்...

பள்ளி காலங்களில்
உறவினர்
திருமணம் காட்டி
கூடுதலாய்
ஒரு நாள் விடுப்பு

கல்லூரி காலங்களில்
பிடித்த நடிகரின்
படம் பார்க்க
மதிய வகுப்புக்கு
மட்டம்

உறவின்
நட்பின்
திருமண நாளின்
முதல் நாளில்
நடுநிசியை தாண்டியும்
நெடிய பேச்சு

செய் தொழிலில்
நண்பர்கள் இணைவில்
வெளியே செல்கையில்
வழக்கமாய்
கொடுக்கும்
கூடுதல் உழைப்பு நேரத்திற்கு
விடுமுறை

இப்படி
எல்லா காலங்களிலும்
எப்போதாவது
நடக்கும்
சந்தோஷ நிகழ்வுகள்
வாழ்வை
சுவராஸ்யபடுத்திக் கொண்டு தான்
இருக்கிறது...

## அதனாலா?

குழுவாய் இருக்கையில்
சாப்பிடலாமா
என்ற கேள்விக்கு
அனைவரும் வேண்டாம் என்கையில்
தனக்கு பசித்தாலும்
அமைதி காப்பது
பார்வைகள் நம்மை நோக்கி
என்பதலா

பொதுப்பொருள் பற்றிய
விவாதத்தில்
அதைப்பற்றி
தெளிவு இருந்தும்
உதட்டு மொழி பகிராமைக்கு
தன்னிலும் வலுவுள்ளவர்களின்
கோபப்பார்வை வருமே
என்பதலா

பிடிக்காத பேச்சுக்கும்
செயலுக்கும்
எதிர்வினையாற்றாமால்
இருப்பது
உறவின் நட்பின்
நீட்டிப்பு வேண்டும்
என்பதலா

சிக்கல் தீர்வுக்கான
விவாதத்தில்
யோசனை பகிராமைக்கு
கூட இருப்பவர்கள்

விவாதத்திற்கு முன்னையே
முன் அபிப்பிராயம்
கொண்டிருக்கிறார்கள்
என்பதலா..

## அங்கேயே தான்...

செயல் முடித்து
காத்திருப்பு காலங்களில்

சாதகமானால்
கிடைக்கும்
அங்கீகாரம்
அதனால்
மகிழ்ச்சி
இதனால்
நம்பிக்கை
அதனால்
அடுத்த கட்ட நகர்வு
பற்றிய எண்ணம்

தோல்வியானால்
வேதனை
நம்பிக்கை இழப்பு
தவறாய் முடிந்தால்
என்னவான காரணம்
என ஆராய்ச்சி
மீண்டும்
முயற்சிக்கலாமா
அதே பாதையா
மாற்று வழியா
வேறான இலக்கா
குழப்பம்

இது எல்லாம்
எங்கே
அங்கேயே தான்
மனித மனங்களில்...

## அதனாலும்....

நியாயமற்ற
குற்றச்சாட்டுக்கும்
நிதான பதிலும்

மனதை படுத்தும்
புரிதல் இல்லாத
வசை மொழிக்கு
காட்டும்
பொறுமையும்

உழைப்பும்
ஆத்மார்த்தமும்
அர்ப்பணிப்பும்
திறனும்
தெரிந்தும்
சிறு சறுக்கலுக்கு
சொல்லப்படும்
ஏளனங்களில்
காட்டப்படும்
அமைதியும்

இயல்பாய்
உள்ளுக்குள்
இருப்பது மட்டும்
இல்லை

பொருளாதார
காரணிகளினாலும்
எதிர்காலம் கருதியும்
வாழ்க்கை பயணத்தின்

கிடைத்த அனுபவத்தாலும்
அதன் விளைவாய்
கிடைத்த
மனமுதிர்ச்சியாலும் தான்

## வழக்கமான...

இன்றைய
இருப்பை
முழுவதுமாய்
செலவழிக்கையில்
நாளைக்கு
என்ன செய்வாய்
என்ற கேள்விக்கு

இன்றைக்கு
இது தான்
சாத்தியம் என்ற
துல்லியமற்ற முடிவில்
நாளை இது பற்றிய
விமர்சனம் வருமே
என்ற தர்க்கரீதியான
வினாவுக்கு

இன்றே
முடிக்க வேண்டியவை
பாதியில் நிற்க
நாளைக்கு இதற்கான
கேள்விக்கு என்ன பதில்

இன்று
பதிலே கிடைக்காத
வினாவுக்கும்
தீர்வே வராத
குழப்பத்துக்கும்
இதற்கான
விடையாய்
நாளை என்ன
செய்யப்போகிறாய்

என்பதற்கு
வழக்கமான
பதிலாய்
'பார்த்துக்கலாம்

## வகை வகையாய்...

இது வேண்டும்
என்ற முயற்சியில்
வெற்றி தா

அது நடக்கக்கூடாது
என்ற எண்ணப்படி
நடத்தி காட்டு

இடைஞ்சல்கள்
வந்தாலும்
சமாளிக்க
வழிகள் காட்டு

தோல்வி வந்தாலும்
மீண்டு வர
முயற்சிக்க
நம்பிக்கை கொடு

இழப்பு ஏற்பட்டாலும்
அதை விட
பெரிதாய் நல்லதை
கொடு

கடினங்களும்
ஏளனங்களும்

வசை மொழிகளும்
பரிசானாலும்
தாங்கிக்கொள்ளும்
ஆற்றலை கொடு

அங்கீகாரமும்
பாராட்டும்
கிடைக்கையில்
அலட்டல்
இல்லாத
மனதையும்
புத்தியையும்
கொடு

எல்லாவற்றுக்கும்
முத்தாய்ப்பாய்
என்ன செய்வது
என்றே தெரியவில்லை
நல்வழி காட்டு

என வகை வகையாய்
இறைவனிடத்து
மனம் உருகி
பிரார்த்தனை

## இப்படியே...

நேற்றைய
இழப்புக்கு
வருந்தி

இன்றைய
தோல்விக்கு
துக்கப்பட்டு

நாளை
என்ன ஆகுமோ
என பயப்பட்டு

அவர் அழைக்கிறாரே
என்ன வசை மொழி
கிடைக்கப்போகிறதோ
என படபடத்து

இவர் போல்
நாம் இல்லேயே
என பொறாமைப்பட்டு

அத்தனை நேரங்களையும்
இதற்காகவே
செலவழித்தால்

தன் விருப்பங்களை
நிறைவேற்றி கொள்ளும்

தன் தனித்தன்மை
பார்த்து
தட்டிக்கொடுத்து கொள்ளும்

சரியாய் அமைந்த
தன் செயல்பாட்டுக்கு
திருப்தி கொள்ளும்

வாழ்க்கை எப்போது?

## சின்ன சின்ன வார்த்தைகளில்

உதவி மறுப்புக்கு
பரவாயில்லை
'எதிர்பார்ப்பின்
ஏமாற்றம்'

ஒத்த கருத்துக்கு
அதே தான்
'தன்னுடையதைப்போல
உள்ளதால் சந்தோஷம்'

மாற்றுக்கருத்துக்கு
இல்லவே இல்லை
'ஏற்றுக்கொள்ளா
முடியா கோபம்'

வருத்த செய்திக்கு
'அடாடா
'வெளிப்படும்
வேதனை'

வெற்றி பகிர்வில்
'அருமை
'பாராட்டின்
வெளிப்பாடு'

இப்படியாய்
அந்த கணத்தின்
ஒட்டு மொத்த மன
உணர்வுகளின்
வெளிப்பாடு

## எல்லாத்துக்குமாய்..

நிலுவையில் உள்ள
வேலைக்கு

ஆரம்பிக்கவே இல்லா
பணிக்கு

யோசிப்புக்கு பின்னான
கிடைக்கா தெளிவுக்கு

எதிர்பாராதவை குறுக்கீட்டில்
காட்டா எதிர்வினைக்கு

வாய்ப்புகளின் தெரிவில்
உள்ள குழப்பத்துக்கு

செயல் தோல்வியின்
காரண ஆராய்ச்சிக்கு

வெற்றியின் உவகைக்கு
அப்புறமான நகர்வுக்கு

உடல் சோர்வின்
போதான கேள்வியில்
'நாளைக்கு'

—

*A. S. சுந்தரராஜன்*
மானாமதுரை



# கடவுளின் சேமிப்பு

புதிதாக கட்டப்பட்ட
கோவிலின் சுற்றுச்சுவரில்
ஒரு வாசகம்
மழைநீர் சேமிக்கப்படுகிறது
எனக்கென்னவோ அதை
கடவுள் சேமிக்கப்படுகிறார் என்றே
படிக்கத்தோன்றுகிறது...!

## ஆட்டத்திருப்பர்

சனியனே வேன் வரப்போகுது என்று
முதுகில் ஒரு தட்டினை அழுத்தமாக
பதியவிட்டு
கையிலிருக்கும் அலைபேசியை
வெடுக்கென்று பிடுங்கி
தரதரவென்று இழுத்துச்சென்று தலையில்
தண்ணீரை ஊற்றி
அழுக்குத் தேய்க்கும் வாய்ப்பில் மீண்டும்
அடியினை முதுகில் வைத்து
குளிப்பாட்டி
வாய்க்குள் வைத்து சாப்பாட்டைத்
திணித்து
வெள்ளை அடிக்காத குறையாக
முகப்பவுடர் பூசி
அழைத்துச்சென்று வேனில் ஏற்றும்
போது
என் செல்லம்ல என்று முத்தத்தைக்
கொடுத்து டாட்டா காட்டும் தாயிடம்
எதுவுமே நடக்காததுபோல்
புன்னகையோடு கையசைக்கிறது
அம்மழலை
ஒற்றைச்சொல்லில்
ஆட்டத்திருப்பராகிறாள் தாய்

—

நேசன் மகதி

---

# நீயற்ற என் நாட்கள் !!

என் துயரங்களின் விளிம்புகளை
கடக்க என்னுடன் பயணித்து வந்து
நின்றாய்...
என்னை வெறுக்கும் ஆயிரம்
உள்ளங்களுக்கு நடுவே,
என்னை உயிரெனத்
தாங்கிக்கொண்டாய்...!

முகம் சுழிக்காமல்,
எனக்கென வந்த ஒரே உள்ளம் உனது...
ஆயிரம் பேர் என்னைச் சுற்றி
இருந்தாலும்,
ஆயிரம் அன்புகள் என்னைத்
தழுவினாலும்,
என் ஆறுதல் மொழி -
நீ மட்டும் தான்...!

என்னை நானாக ஏற்றுக்கொண்ட
உன்னை
இழந்த வலியை
எந்த வார்த்தைகளால் தேற்றுவதென்று
தெரியாமல்
ஒவ்வொரு நாளையும் கடந்து
கொண்டிருக்கிறேன்...

“அக்கா...” என்று
நீ அழைத்த அந்தக் குரல்,
இன்று என் காதுகளில் ஒலிக்கும்
போதெல்லாம்
வார்த்தையின் அர்த்தமே
என் கழுத்தை நெரித்து,
“நீ எங்கே?” என்று
என்னையே கேட்கிறது...

பதிலாக,
அழுகை மட்டுமே
என்னிடம் மிஞ்சுகிறது...!

எனக்கென நீ தவறாமல் வாங்கி வரும்
அந்த கேக்குகள் எல்லாம்,
இன்று என் வாழ்நாள் வெறுப்புகளாகி,
கடைகளின் அலமாரிகளில்
வெறுமனே அடுக்கப்பட்டிருக்கின்றன...

“உனக்கு ஒன்று...
எனக்கு ஒன்று...” என்று
என் ஞாபகத்திற்காக
நீ கொடுத்த அந்த ஒற்றை ரூபாய்
நோட்டு
இன்று என்னிடம்
பரிதவித்து நிற்கிறது•••

ரத்தக் கறை படிந்த
அந்த கைபேசியின் பின்னால் இருந்த
இன்னொரு ஒற்றை ரூபாய் நோட்டு...
என்னை ஓவென அழ வைத்தது...
என் மனதை
சுக்கு நூறாக உடைத்தது...!

அடிபட்ட உனக்கு
சீக்கிரம் சரியாகிவிடும் என்று
ஆயிரம் வேண்டுதல்களை
மனதுக்குள் அடுக்கிக்கொண்டே
உன்னைப் பார்க்க ஓடிவந்த என்னை,
அந்த இறைவனும் ஏனோ
சதி செய்து சிதைத்துவிட்டான்...

ஆறாத ரணங்களை
ஆயுள் முழுவதற்கும்
அடுக்கி வைத்துவிட்டான்...!

“சரியாகி வந்துவிடுவாய்...”
என்ற நம்பிக்கையோடு
ஓடோடி வந்த என்னை,
உன்னை இப்படி பார்க்க வைத்த
அந்த நாள் -
என் வாழ்நாளின்
மிகப்பெரிய தண்டனை நாள்...!

இரவு உறங்கும் முன்
“மாமா...” என்று கேட்கும்
என் மழலையின் கேள்விக்கு,
எதைச் சொல்லி சமாதானம்
செய்வதென்று
இன்றுவரை புரியாமல்
புதிராகவே கடக்கின்றன
என் நாட்கள்...

நீயும் நானும்
இரண்டு மாதங்களுக்கு முன்
பறித்த நெல்லிக்காய்கள் கூட,
இன்று அங்கு வரும்போதெல்லாம்
என்னை ஏளனமாகப் பார்த்து,
“உன் தம்பி எங்கே?”
என்று கேட்பதுபோல் இருக்கிறது...

அவற்றைப் பார்க்கும் ஒவ்வொரு
முறையும்
“என் தம்பி...” என்று

உடைந்து அழுகிறேன்...
உன் நினைவுகளை
அள்ளிக்கொண்டவாறே...!

நீயும் நானும்
தேர் திருவிழாவில்
உன் மாமாவை விட்டுவிட்டு
ஒன்றாக ஓடி வந்து,
திட்டு வாங்கிக்கொண்டே
சிரித்த அந்த தருணங்கள்...

இன்று நினைவுகளாக மட்டும் நின்று,
எந்தத் திருவிழாவின் பக்கமும்
செல்ல மனமில்லாத அளவிற்கு
ஆறாத ரணங்களை
என் நெஞ்சில் சுமத்திவிட்டன...!

எல்லோருக்கும்
பழகிப்போகும் உன் பிரிவு...

ஆனால்,
நீ இல்லாத ஒவ்வொரு நாளும்
எனக்கு ஒரு யுகமாக நீள்கிறது...

என் வானம் முழுவதும்
தினமும் தேடுகிறேன்...
உன் சாயல்களை...
உன் சிரிப்பை...
உன் குரலை...

மறையாத அந்த
நமட்டு சிரிப்பை
மறந்துவிடும் அளவிற்கு
தைரியமானவள் நான் இல்லை...

யார்மீதும் வைக்காத
அளவுகடந்த அன்பை
உன்மீது மட்டும் வைத்துவிட்டு,
இன்று அந்த அன்பு முழுவதையும்
சுமையாகச் சுமந்து தவிக்கிறேன்...

இந்த வேதனை...
என் எதிரிக்குக் கூட
ஒரு முறை
வந்துவிடக் கூடாது...!

ஏனென்றால்...

உன்னை இழந்தது
ஒரு மனிதனை இழந்த வலி அல்ல...
என்னுள் இருந்த
ஒரு உலகத்தையே இழந்த வலி...

நீ இல்லாமல்
நான் வாழ்கிறேன்...
ஆனால்,
நீ இருந்த அந்த வாழ்க்கையை
இன்று வரை வாழ முடியவில்லை...

என் தம்பி...
நீ எங்கே சென்றாலும்,
என் நினைவுகளின் எல்லைக்குள்
நீ என்றும்
என்னுடன் தான் இருப்பாய் !!!

- கவிமலர் சரண்யா,
சுந்தராபுரம், கோவை.



# ஆசிரியர்

உயிரின் வலியை
உணர்ந்தாலும்
உயிர்மெய்யின் ஒலியை
உயிர்ப்பித்து ஓதும்
உன்னத சங்கு....!

புத்தியில் நிற்பதை
உத்தியில் உரைக்கும்
உரையாடல்
சக்கரவர்த்தி...!

அழுது அழுது நிற்கும்
மழலை சொற்களை
உழுது உழுதுபயிரிடும்
எங்கள் விவசாயி...!

போராடும் வகுப்பறையில்
அமைதியாய் நின்றாடும்
அகிம்சை வாதி...!

கரும்பலகையில்
வெண்சங்கெடுத்து
பாலூட்டும் அன்னை...!

திசை மாறும்
உள்ளங்களை தன்
விசையால் மாற்றும்
கலங்கரை விளக்கு...!

சோதனைகள் உழன்றாலும்
சாதனை வேராய்
சுழன்றாடும்
ஆலமர நிழல்...!

பல கோணங்களில்
ஞானத்தை ஊற்றும்
எங்கள் போதிமரம்...!

பசுமரத்தாணியாய்
ஆழ பதிந்து நிற்கும்
எங்கள் எண்ணங்களின்
சுடரொளியே...!
உம்மால் இன்றும்
ஒளிர்கிறது
எங்களின் வாழ்வோடு
உங்களின் புகழும்....!

ஆசானுக்கு
ஆசிரியர் நாள்
வாழ்த்துகள்

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# மோனையில் வீணை!

யாருமற்ற நிலையில் யாதுமாகி
நிற்கிறதே;
யார்யாரோ தந்த தனிமை!

இயல்பினை மீறினால் இயற்கையும்
பிழைதான்;
இயல்புடன் வாழ்ந்தலே நன்று!

மூவர்ணக் கொடியினில் முழுமையாய்
சுவாசமே;
மூச்சினை விஞ்சிடும் தேசமே!

நிலையற்ற இவ்வாழ்வில் நிழல்கூட
நமக்கில்லை;
நிலையென்றால் ஒன்றேதான் இறை!

கோபத்தில் இழந்ததை கோடிட்டுக்
கண்டால்
கோமாளியை விஞ்சிடும் செயல்!

கால்களை கட்டவிழ்த்து கனவுகளால்
சிறகமைத்து;
காலத்தை வென்றதே வண்ணத்துப்பூச்சி!

வழிப்போக்கன் வாழ்வுதனில்
வளமென்று ஏதுமுண்டோ?
வலியொன்றே வழியாகும் காண்!



— வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

# நான் தொலைகிறேன்....

## உங்களைப் போலவே

ஆகாயம் கைகளுக்கு
எட்டும் தூரம்தான்
என்றிருந்தேன்.
ஆகாயம் நோக்கி
புறப்பட்டப் பறவையை
புள்ளியாக்கி விழுங்கி
முடித்த போதுதான்
எனக்கு
முழுமையாகத் தெரிந்தது
ஆகாயத்தின் சுயம்.

## தொலைந்தது குறித்து

காவல்நிலையத்தில்
புகார் கொடுத்தாயிற்று.
தேடலுக்கு உதவியாய்
புகைப்படம்
தொலைந்த இடம்
ஆடையின் நிறம்
உயரம் அங்க அடையாளம்
கிடைத்ததும்
தகவல் தர வேண்டிய
தொலைபேசி எண்கள்
கொண்டு
சேர்க்க வேண்டிய இடம்
வருந்தும் உள்ளங்கள்
சன்மானத்த தொகையென

அனைத்தும்
அறிவித்தாயிற்று.
நான் தொலைகிறேன்.
விரைவில் கண்டெடுங்கள்
என்னை.

## கொடுத்த கடிதத்தின் மேல்

பூ வைத்து அடையாளப்படுத்தி
இருக்கிறாய்
அது காதல் கடிதமென்று.
எனது பதிலையும்
அதன் காதலையும்
ஒருங்கே ஆமோதிக்கிறது.

அந்தப் பூவின் மேலமர்ந்த
ஒரு பட்டாம்பூச்சி.

## என் பிழைகளை

நிறங்களின் மீது
நான் எழுதப்போவதில்லை.
நினைவு தெரிந்த
நாள் முதலாய்
துக்கத்தின் வெளிப்பாடு
கருப்பென்பதால்
அதை நிறமென்று
ஆதரிக்காதவன் நான்.
புரட்சியின் வெளிப்பாடு
சிவப்பென்பதால்
அதை மட்டுமே நீ
நிறமென்று ஆதரிக்கிறாய்.
ஆதி நிறங்களான
கருப்பு வெள்ளையில்
இருந்து தான் பிற நிறங்கள்
அவதானித்து இருக்கக் கூடும்.
ஆதியிலிருந்தே குருதியின்
நிறம் சிவப்பென்பது மட்டும்
அனைவரும் அறிந்த ஒன்று.

## வரையறைக்குள்

இயங்கும் மானுடத்தை
மீண்டும் ஒரு புள்ளிக்குள்
திணித்து
நாடகமாடும் பிரபஞ்சம்.

ஒரு துளியில்
பிரசவித்த உயிருக்குள்
எண்ணற்ற உறவு முடிச்சுகள்.

ஆகாயத்திற்கும் பூமிக்குமாய்
படர்ந்த இவ்வெளியில்
ஜீவித்த உயிர்களால்
இவ்வுலகம் இயங்குகிறதெனில்
கண்ணுக்குப் புலப்படாத
அனைத்தையும்
நாம் கடவுளென்றே
சொல்லிக் கொள்ளலாம்.

- கவிதைகள் ஆக்கம்

பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353.



# மௌனம் ததும்பும் குளம்

கல்லெறியும் சிறுவன்
ரங்கோலி சனனம்

*

மேகங்களின் முத்தம்
மின்னல் தெறிக்கிறது
பூமியில் மழைப்பொறி

*

சுமக்க ஆளில்லை
சாலையோரம் திரியும்
நடைபிணம் மிகுதி

*

இருவிழி உலை
வேகிறது இதயம்
சாகிறது காதல்

*

நிழல்தரும் மரங்கள்
கோடையில் ஓய்வு
இலையுதிர் காலம்

*

காய்கறி விலையேற்றம்
பழங்கஞ்சி சுவைக்கும்
நடுத்தர வாழ்வு

*

மனைவியின் கூந்தல்
நறுமணம் வீசவில்லை
மலம் அள்ளும் வேலை

*

பழுக்கத் துவங்கிய மரம்
உடம்பெல்லாம் காயம்
வஞ்சகக் கற்கள்

*

மணலற்ற தேசம்
மழையற்ற வானம்
மரம் வெட்டும் மனிதன்

*

அடைமழை அறிவிப்பு
நகரம் முழுதும்
பேரிடர் மீட்புக் குழு

*

நரிகளின் கூட்டணி
சிங்கத்தின் ஆட்சி
மெல்ல அழியும் வனம்

*

வங்கியில் கடன்
வறட்சியில் நிலம்
விவசாயி மரணம்

*

முற்றி வெடித்தது காய்
பஞ்சுபஞ்சாய்ப் பறக்கின்றன
பழந்தின்னும் ஆசை

*

முள்ளைக் குத்திய காலை
வலியால் தண்டிக்கிறேன்
கண்ணீரில் விழிகள்

*

அனல் பறக்கும் சாலை
அவள் நினைப்பில் மூளை
கானல்நீர் வெள்ளம்

*

அனாதை இல்லம்
சுற்றம் சூழ வாழ்வு
பொய்க்கனவு

*

கூட்ட நெரிசல்
காவலர் குவிப்பு
சாவு நிச்சயம்

*

கண்கெட்ட பின்
கதிரவ வழிபாடு
காதல் கொடிது

*

கால்களை விலகி
மதிப்பற்றுக் கிடக்கும்
வீதியில் செறுப்பு

*

நெகிழிக் குப்பை
பொறுக்கிப் பிழைக்கும்
சமூக ஆர்வ ஏழை

*

ஒரேத் தட்டு
சுற்றம் சூழ உண்ணும்
பள்ளி நட்பு

*

பனையின் கரிய மேனி
இறுகிப் புணரும்
ஆலம் விழுது

*

வனத்தை விதைக்கும்
உன்னத நிகழ்வு
பறவை எச்சம்

*

திருடும் எண்ணம்
திருடனுக்கு இல்லை
ஏழை வீட்டில்

*

கடன் கொடுத்ததைக்
கேட்காத நாள்வரை
நிலைக்கும் உறவு

*

மின்சாரக் கம்பியில்
பாதுகாப்பாய்க் கூடு
தூக்கணாங்குருவி

*

மேனியெல்லாம் முட்கள்
பொன்னிறப் பூக்களால்
சாலையோர நெருஞ்சி

*

கரடு முரடான சாலை
இன்னும் மிச்சமுள்ளது
அரசின் வாக்குறுதி

*

மகன் கைவிட்டால் என்ன?
மரணம்வரை காப்பாற்ற
கைவசம் யாசகம்

*

பாவங்கள் நிரம்பும்
அருள்மிகு பாத்திரம்
கோவில் உண்டியல்

*

முழுதும் அருந்திய
தேநீர் கோப்பையில்
சுவையின் இறுதிச் சொட்டு

*

வாழவைக்கும் பூமிக்கு
வருடம் தவறாமல் நன்றி
இலையுதிர்க் காலம்

*

வளர்த்த முயல்
சமைத்து உண்கையில்
கசப்பு சுவை

*

வீதி முழுதும் சிமெண்ட்
விளையாட மண்ணில்லை
திறன்பேசி சிறை

*

நீ அற்ற தருணம்
நினைவுகள் முழுதும்
எரிதழல் வன்மம்

*

கூட்ட நெரிசலில்
எங்குத் தேடியும் சிக்கவில்லை
சாதிக்குப்பை

*

விதிகள் மீறினால்
மட்டற்ற மகிழ்ச்சி
குழந்தை விளையாட்டு

*

குழந்தை இல்லை
தொட்டில்கள் சுமக்கும்
கோவில் மரங்கள்

*

நீர் வற்றும் குளம்
சேற்றுக்குள் நடுங்கும்
மீன்களின் இதயம்

*

பொரி உண்டு வளரும்
தீர்த்தக்குள மீன்கள்
ஒரு லட்ச ஏலம்

*

இலைகளின் சாபம்
கறிக்கடை கொக்கியில்
தோலுரித்த ஆடு

*

தலைக்கவசம் இல்லை
சாலைவிபத்தில் பலி
போக்குவரத்துக் காவலர்

*

நாய்கள் நடமாடும்
நள்ளிரவு சாலை
திருட்டுப் பயமில்லை

*

எவனோப் படைத்தான்
எவனோ வளர்த்தான்
எவனோ எரித்தும் முடித்தான்

*

காக்கைகள் வரவில்லை
மைனாக்கள் பசியாறும்
அமாவாசை சோறு

*

கண்ணேறு கழித்த
கல்யாணப் பூசணியால்
உயிர்ப்பலி நான்கு

*

பசிக்கு வேண்டியது
மூட்டை அரிசி அல்ல
ஒரு பிடிக் கவளம்

*

காய்கள் பழுக்கத் துவங்கின
கிளைகள் முழுதும்
பறவையின் எச்சம்

*

பூக்களை உதிர்த்து
விதைகள் உற்பத்திச் செய்யும்
தாயன்பு மரம்

*

அநாதைப் பிணத்தின்
மூடிய கரங்களில்
தேசத்தின் நாணயம்

- பொன். தெய்வா,
ஐவேலி, மூப்புரம் மாவட்டம்.





ஓவியம்: மா. நிரல்யா,
மூன்றாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# இதழ் குவிப்பில் உன் பெயர்



அழகிய அதரங்களில்
அன்பினைச் சுமப்பவளே

இதழூறும் அமுதமே
இனிதான குமுதமே

கனிவானப் பார்வையால்
கவர்ந்திட்டப் பாவை

மயிலின் தோகையே
மயங்குகிறேன் தோழியே

ஓராயிரம் எண்ணங்களின்
ஓய்ந்திடாத உனது ஞாபகங்களே

அல்லிமலராய் மலர்ந்தவளே
நாசியில் சுவாசமானவளே

வஞ்சியுன் எழிலில்
வாசனையும் வீசுகிறதே

நறுமணமான நங்கையே
நாணத்தின் பொக்கிசமானவளே

மயக்கம் என்னுள்ளே
தயக்கமேனோ உன்னுள்ளே

எனது இதழ் குவிப்பில் உன்பெயரை
நித்தமும் உச்சரிக்கிறேன்

வாடாமலரான வசந்தமே
வாழ்வில் என்றும் சுகந்தமே

நளினமான இடையசைத்து
நங்கூரமிட்ட என்னவளே

அசையாது நானிருக்கிறேன்
ஆசையது கடலலையாய் ஆர்ப்பரிக்கிறது

காதலான சொந்தமே
கனிவானது பந்தமே

ஏக்கமது என்னில் இல்லை
ஏந்திழை உனது வரவாலே

இன்பமது இல்வாழ்வில்
இதமாய் தொடரட்டுமே

நினைவுகள் நிழலாட
நெஞ்சங்கள் உறவாடிடுமே

- பெ. வெங்கட லட்சுமி காந்தன்,
விருதுநகர்.

# இதோ காதல் .!!

காதல் என்னவென்று
நீ அறிய நேரிட்டால்
காதல் பெற்று தோற்று
நின்றவரிடம்
கேட்டுப்பார் ..!!
எது காதல் என்று?
அவரின் வலிகளே காதல் அன்று...

- கவிஞர் ம. செல்லமுத்து,
நூத்தப்பூர் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம்.

# புத்தகங்கள் பேசினால்...

ஒவ்வொரு நாளும்
காத்திருக்கிறேன்
பிரித்துப் படியுங்கள்
பிடிக்கும் என்னை....

ஒவ்வொரு தாளாக
பிரித்துப் படித்து
எச்சில்பட்டு என்னை நீங்கள்
திருப்பும் போதும்
புத்தகமான நான்
பூர்த்தி பெறுகிறேன்..

கூர்ந்து பார்த்து
ஆழ்ந்து நீ படிக்கும் போது நான்
அர்த்தமுள்ளதாகிறேன்..

பணிச்சுமை
என்று என்னைப்
படிக்காமல் செல்லாதீர்கள்..

படித்தால்
பக்குவப்படுவீர்கள்...
பண்படுவீர்கள்
விண் தொடுவீர்கள்..

இதோ...
உங்கள் பார்வையில்
நான் இருக்கிறேன்
படிக்க நேரம் ஒதுக்குங்கள்

என்னைப்
படிக்கவேண்டும் என்ற
என்ற கட்டாயமில்லை
ஆனால்...

வாசிக்காமல்
வைத்திருப்பது எனக்கு
செய்யும்
வன்முறை அன்றோ...

## மனதோடு ஒரு குரல்

நமக்கான வாழ்க்கை எங்கே...
தேடித் தேடிப் பார்க்கின்றோம்
ஓடி ஓடி உழைக்கின்றோம்..

விருப்பம் இருக்கிறதா தெரியாது..
திருப்பத்தைத் தேடியே திரிகின்றோம்..
ஆசைகளை அடுக்கிக் கொண்டே
காசைத் தேடி அலைகின்றோம்

அடுத்தவருக்காக வாழ்ந்தே நாம்..
படுத்து உறங்க மறக்கின்றோம்..
கோரிக்கை வைத்தே கடவுளிடம்
கொடுக்கச் சொல்லி கேட்கின்றோம்...

இருப்பதினிலே மகிழ்ச்சி காணாமல்
பொருளை நிறைப்பதினிலே
நிறைகின்றோம்...
தவணை முறையில் வாங்கியே
தலைநிமிர்ந்தே நடக்கின்றோம்

அடகு வைக்கும் நகைகளிலே
முடங்கி கிடக்கிறது மகிழ்ச்சிகளும்...
தேவையற்றதை தேடியே நாம்
தெளிவில்லாமல் வாழ்கின்றோம்..

- யாழ் மொழியாள்,
பொள்ளாச்சி.

# அழுகை சத்தம்

நிற்கவே இல்லை
பள்ளிப்பேருந்தில் குழந்தை
தடுமாறும் தாத்தா
வெளிச்சமில்லை
கைத்தடியாய் பேத்தி
வாசலில் பந்தக்கால்
புதையுண்ட ஆசைகள்
எதிர்வீட்டில் முதிர்கன்னி
உருண்டோடும் நாணயம்
மனம் தளரவில்லை
துழாவுகிறார் சாக்கடைக்குள்
பூமியின் தலையில்
புஷ் வானம் அடடே!
தீபாவளியில் குழந்தை
புத்தகம் பேசியது
காதலும் கற்று மற
எழுதினான் கவிதை
ஓயாத கால்கள்
ஒய்யாரமாய் ஆடுகிறது
மதுபானக் கடையில்
ஆளில்லா பேருந்தில்
அமர்ந்து செல்கிறது
தன் இணையுடன் குருவி
கடவுளிடம் அனுமதி
கூடுகள் கட்டின
கோபுரத்தில் பறவைகள்
கொளுத்தும் வெயில்
அறுந்த செருப்பில்
நடைபயிலும் முதியவர்
தாகம் தீரவில்லை
சாக்கடைக்குள் தஞ்சம்
குடிமகன்
அதிகம் விலை
கண்ணில் வழியும்நீர்
வெங்காயம் உரிக்கும் அம்மா
ஊசிபோட்டவர்
செல்கிறார் சொர்க்கம்
போதை ஆசாமி.

- ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---

# தென்றலின் சிலிர்ப்பு

பழகிய தென்றல் தான் என்றாலும்,
அவள் தாவணி உரசி வரும் தென்றல்
மட்டும்
என்னை
கொஞ்சம் சிலிர்க்க வைத்துவிடுகிறது..!

## வயலோடிய வெயில்

ஆலமர நிழலில் ஓய்வெடுக்கிறது
சிறு கருச்சாங்குருகளோடு சேர்ந்து மனம்
வானம் நோக்கிறது

திசையெங்கிலிருந்து இயற்கை
அழைக்கிறது...

காண விரைந்தோடும் கண்கள்
காட்சிகளை
பிரதியெடுத்துக்கொள்கின்றன...

துயரங்கள் மறைந்தோடிய மனதில்
புதுமணம் பரப்புகிறது மலரிதழ்கள்...

தேனெடுத்த வண்டுகள் சிலாகித்து
பறக்கின்றன...

## இன்னும் ஆசிர்வாதம் கிடைக்கவில்லை.

எல்லோர் தலையிலும் கை வைத்து
ஆசீர்வாதம் செய்துவிட்டு
தனக்காக பத்து ரூபாய் வாங்கி செல்லும்
அந்த திருநங்கையென்னும் தேவதைக்கு
இன்னும் ஆசீர்வாதம்
கிடைக்கவேயில்லை ..!

## வேண்டாம் சன்னலோர இருக்கை

புளியமரமில்லை
வேப்பமரமில்லை
புங்கமரத்தடியில்
படுத்துறங்கும் மனிதர்களில்லை.

ஆலமர விழுதுகளில்
ஊஞ்சலாடும் சிறுவர்களில்லை.

வானத்தில்
பறவைக் கூட்டமில்லை.

பின்னெதற்கு
எனக்கு சன்னலோர இருக்கை?

- ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்,
கைப்பேசி: 8867933021

---

# அகம் காட்டும் அழகு...

மங்கலப் புள்ளிகள்,
பொன்னிறச் சுவடுகள்,

நுண்மையான தழும்புகள்,
மேனியில் நறுமணம்!

இயற்கை வரைந்த
ஓவியக் கோலங்கள்,

எழில் கூட்டும்
சிறிய கரும்புள்ளிகள்.

மறைக்க வேண்டா,
இவை அழகின் அடையாளம்,

மலர் வனத்தில்
தேன் சிதறிய தடம் போல.

உயிரின் ஊற்றினில்
கிளர்ந்த இப்புள்ளிகள்,

அகம் காட்டும் அழகு,
மெய்யான ஒளி!



- த. வசந்த குமரன்,
5/316 இரண்டாம் குறுக்குத் தெரு,
பொனியம்மன் கோயில் தெரு,
மேடவாக்கம், சென்னை - 600100

# நான்கு சிறுமிகள்

அந்த பெரு மரத்தடியில்
விளையாடிக்கொண்டிருந்த
நான்கு சிறுமிகள்
ஒன்றுக்கொன்று பேசிக்
கொண்டிருந்தனர்.

முதலாவது சிறுமி இரண்டாவது
சிறுமியை பார்த்து
இவ்வளவு பெரிய மரத்தினால் யாருக்கு
என்ன பயனாகிறது? என்று.
கேட்டுக் கொண்டிருந்தது.

அதோ பறவைகள் கூடுகட்டி
வாழ்கிறதென சொல்ல..

மூனாவதாக சிறுமி...
ஓய்வுக்கு நிழலும் உண்ண பழமும்
கொடுப்பதாக பதிலளித்தது.

நான்காவது சிறுமி விறகுக்கும் படிக்க
மேசையும் என்றது.

முதலாவது சிறுமி
கை நீட்டி காட்டுகிறாள்.

சிறுவயதில் விதைத்து வளர்த்த தன்
தாத்தா
அம் மரத்தடியின் கீழமர்ந்து தியானம்
செய்து கொண்டிருந்தார்.

—

*சாயீராம்,*
தஞ்சாவூர்.
கைப்பேசி: 9443394625.

---

# கூலி

எல்லோரும்
குடும்ப பாரத்தை
முதுகில் சுமக்கும் போது
இவன்
ஊர் பாரத்தை
முதுகில் சுமப்பவன்

ஆடை கழற்றி
வேலைப் பார்ப்பவனுக்கு
வியர்வையே
மாறி விடுகிறது
ஆடையாக

பெருநகரங்களில்
ஆடம்பர ஊர்திகளில்
வந்திறங்கும்
செல்வந்தர்களிடம்
ஐந்துக்கும்
பத்துக்கும்
பேசும் பேரத்திலேயே
கழிந்து விடுகிறது
விலை மதிப்பில்லா நேரம்

ரயில் நிலையம்
காய்கறி கடை
பேருந்து நிலையம்
திருமண மண்டபம்
கோயில் திருவிழா
அனைத்திலும்

இன்னமும்
சுமந்து ஓடுகிறான்
நமக்காக
ஒரு தொழிலாளி

இறக்கி வைத்த
சுமைகளில்
இன்னமும்
ஒட்டியிருக்கிறது
கூலித் தொழிலாளியின்
வியர்வையும்
ரேகையும்

ஊதியமே
அவன் பெயரானது
கூலி

பலருக்கு
உடலில் மட்டும்
சிகப்பு
தொழிலாளிக்கு
உடலின் வெளியிலும்
சிகப்பு



- *சா.கா. பாரதி ராஜா,*
*மனை எண் 1, ஹரிஹரன் நகர்,*
*வசந்தம் நகர் (உட்புறம்), திம்மாவரம்,*
*செங்கல்பட்டு - 603101.*
*பேச - 9944315732*

---

# அடி

*திருத்திய விடைத்தாள்கள் கட்டை கவனமாகக் கையில் எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டார் வரலாறு நடத்தும் அருணாச்சலம் வாத்தியார். திடீர் நினைவுக்கு வளைந்துகொடுத்து கையில் வைத்திருந்த கைப்பை மற்றும் விடைத்தாள் கட்டை அப்படியே மேசையில் வைத்துவிட்டு பின்புறம் தோட்டத்திற்குச் சென்றார். செழிப்பான தோட்டத்திற்கு காவல் வேலியாக வரிசைகட்டி நின்ற ஊமத்தை செடிகளிலிருந்து தடிமனல்லாததாகவும் சுமார் ஒன்றரையடி நீளமுள்ளதாகவும் தேடிப் பார்த்து ஒரு கிளையை உடைத்தார். கழுவிச் சுத்தம் செய்துகொண்டார். வீட்டிற்குள் வந்து மேசையில் வைத்தவற்றை மறக்காமல் எடுத்துக்கொண்டு வெளியில் வந்து தமது டி.வி.எஸ் 50 யைகிளப்பிப் புறப்பட்டார். கருவேல மரங்கள் நிறைந்த காட்டுப்பாதையைக் கடந்து பள்ளியை அடைந்தார்.*

*ஆண்டுக்கு ஆண்டு தாம் பணிபுரியும் பள்ளி, மாவட்ட அளவில் படி நிலையில் உயர்ந்து வருவதை எண்ணி அருணாச்சலம் வாத்தியார் பள்ளிக்கூடத்திற்குள் நுழையும்போதெல்லாம் பெருமைப்பட்டுக்கொள்வார். இந்த ஆண்டு மேலும் ஒரு படி உயரும் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. காரணம் கடந்த தேர்வில் திருத்திய விடைத்தாள்களில் இருந்த மதிப்பெண்களைவிட இந்தத் தேர்வின் விடைத்தாள்களிலிருந்த மதிப்பெண்கள் அதிகம்.*

*கோபாலன் மிகவும் விரும்பி எழுதும் தேர்வு வரலாறு. தாராளமாகக் கூடுதல் தாள்கள் வாங்கி நிறைய எழுதி வைப்பான். மற்ற தேர்வுகளை இரண்டரை மணிநேரங்களில் எழுதினால் வரலாற்றுப் பாடத்தை மூன்று மணிநேரங்கள் கடந்தும் எழுதிக்கொண்டிருப்பான். ஆசிரியர்களும் அவனிடமிருந்து தாள்களைப் பிடுங்காத குறையாக தரச்சொல்லிக் கெஞ்சுவார்கள். கோபாலனும் "இதோ தரேன் ஐயா, ஒரு நிமிசம் ஐயா" என்று இழுத்தடித்து எழுதிய அத்தனை பக்கங்களும் பத்திரமாக இருக்கும்படி இரண்டு நூல்கள் வாங்கித் தாள்களை ஒன்றுசேர்த்து முனையில் கட்டிக் கொடுப்பான். ஆசிரியர்கள் ஆச்சரியமாகப் பார்ப்பார்கள்.*

*இத்தனை உழைப்பிற்கு பின் அவன் பெறும் மதிப்பெண் வியப்பானது. மற்ற பாடங்களில் தகுதி மதிப்பெண்ணாவது பெறும் கோபாலன், அத்தனை பக்கங்கள் எழுதிய வரலாற்றுப் பாடத்தில் மட்டும் தகுதி மதிப்பெண் பெற முடியாமல் தவிப்பான். காரணம் என்னவென்று அடுத்த பத்தியை வாசியுங்கள் புரியும்.*

*அசோகரைப் பற்றிய கேள்விக்கு, 'கோடையில், அதிகமான வெயில் சூட்டின் காரணமாகச் சாலையில் செல்லும் பல்லவன் பேருந்துகளின் டயர்கள் உருகி வெடித்தன. இதனால் பேருந்துகள் அதிகமாக பணியிடங்களுக்கு அனுப்பப்பட்டன. சாலைகளில் போக்குவரத்து குறைந்தது. போக்குவரத்தின்றி மக்கள் சிரமப்பட்டனர். ஆகவே மக்களின் நலன் கருதியும் பல்லவன் பேருந்துகளின் டயர்களின் பலன் கருதியும் அசோகர் சாலை ஓரங்களில் மரம் நடுவதற்கான ஆணை பிறப்பித்தார். அந்த ஆணை நிறைவேறிய பிறகு சாலைகளின் இருபுறங்களிலும் மரங்கள் செழித்து வளர்ந்தன சாலைகள் எங்கும் நிழல் பரவி நின்றது. பல்லவன் பேருந்துகள் சுகமாகப் பயணித்தன. மக்கள் மகிழ்ச்சியாக ஊர்களுக்குப் பயணித்தார்கள். ஆசோகரைப் பாராட்டினார்கள்.' என்று எழுதி வைத்தான்.*

*இதை அருணாச்சலம் வாத்தியார் வகுப்பில் படித்துக்காட்டினார். மாணவர்கள் அதைக் கேட்டு கைதட்டிச் சிரித்தனர். வாத்தியார் கோபாலனை அழைத்தார். அவரின் மேசையருகே சென்று பவ்யமாக நின்றான் கோபாலன். "ஏண்டா அசோகர் காலத்துல ஏதுடா பல்லவன் பஸ்?" என்றவாறு கோபாலன் எதிர்பாராத நேரத்தில் மேசையில் வைத்திருந்த ஊமத்தங்குச்சியை தன் வலது கரத்தில் எடுத்து கோபாலனின் இடது முழங்காலுக்குக் கீழே அடித்தார்.*

*"யம்மா..." என்று அலறியபடி குனிந்தான். அடிவாங்கிய காலைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு அடுத்த காலைத் தரையில் பதித்து நொண்டிய வண்ணம் பின்னே நகர்ந்தான் கோபாலன். பலமாகப் பட்டுவிடக் கூடாது என்றெண்ணித்தான் அடித்தார், கோபாலனின் செயலைக்கண்டு அடி பலமாகப் பட்டுவிட்டதோ என்று வருந்தினார் வாத்தியார்.*

அருணாச்சலம் வாத்தியாரின் நினைவில் அன்று முழுவதும் கோபாலன் நிறைந்திருந்தான், பௌர்ணமி வானத்தை ஆக்கிரமித்திருக்கும் முழுநிலவு போல. கல்வி வேறெவற்றாலும் ஈடு செய்ய இயலாத செல்வம். மாணவர்களின் எதிர்காலம் சிறக்க கல்வி மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. அத்தகைய கல்விச் செல்வதை மாணவர்கள் அத்தனைபேரும் கற்று பலன் பெறவேண்டும். இப்படியான எண்ணம் கொண்டவர் அருணாச்சலம் வாத்தியார். அவர் கற்றுக்கொடுக்கும் விதம் கிளிப்பிள்ளைக்கு சொல்லிக் கொடுப்பதுபோல இருக்கும்.

விடைத் தாள்களை வழங்கும்போது மட்டுந்தான் கையில் ஊமத்தங்குச்சியைத் தொடுவார். பாடம் நடத்தும் வேளைகளில் அத்தனை பொறுமையாகச் சொல்லிக் கொடுத்த பின்னும் மாணவர் நல்ல மதிப்பெண் பெறவில்லை எனில் அவருக்கு கோபம் வரும். அந்தக் கோபத்தில் ஊமத்தங்குச்சி உயிர்கொள்ளும். அதற்கு பின் அன்று முழுவதும் மாணவர்களைத் துன்புறுத்திவிட்டதாக எண்ணி வருந்துவார். அணுவணுவாக விளக்கிச் சொல்லியும் மனதிலேற்றுக் கொள்ளாத மாணவர்களை அடிப்பதால் மாறிவிடுவார்களா? என்ற கேள்வி அவருக்குள் எழாமலில்லை, இருந்தாலும் அவருக்கு வேறு வழி தெரியவில்லை. தண்டனை வழங்கிய பின்னர் தனிமையில் வருந்துவது அவருக்கு வாடிக்கையாகிவிட்டது.

அடுத்தநாள் கோபாலனை அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடக் உணவகத்திற்கு சென்றார், இரண்டு தேநீர் மேசைக்குக் கொண்டுவரச் சொல்லிவிட்டு வரிசையாகப் போடப்பட்டிருந்த மேசைகளுள் ஒன்றைத் தேடி அமர்ந்தார். அவரருகில் கோபாலன் மௌனமாக வந்து நின்றான். "உட்காருடா" என்று எதிர் இருக்கையைக் கை காட்டினார் அருணாச்சலம் வாத்தியார். அமர்ந்தான்.

"கோபு என் மேல கோபமா?" என்றார். குரலில் குளுமை இருந்தது. பார்வையில் கனிவிருந்தது.

"இல்ல சார், நான் படிக்காதது என் தவறுதானே" என்று தன் தவறை ஒப்புக்கொண்டு கனத்த மனதுடன் தலை கவிழ்ந்தான் குலை தள்ளிய வாழைபோல.

"நேத்தெல்லாம் என் மனசே சரியில்லடா… உங்களை அடிச்சு துன்புறுத்தறது என் நோக்கமில்லை. மாணவர்கள் வருங்காலத் தூண்கள்னு சொல்வாங்க. தூண் உறுதியானதாகவும் நிலையானதாகவும் இருக்கணும் அதற்கு பாடுபடுவது ஆசிரியரின் கடமை. என் கடமையை இயன்றவரை சரியாகச் செய்வதாவே நம்புறேன்…"
உணவகத்திற்கு வந்து போன பிறருக்கு இவர்கள் பேசுவதில் கவனம் செலுத்த நேரமில்லை. வரலாற்றைப் பற்றி தான் அறிந்தவற்றை கோபாலனுக்குச் சொல்லத் தொடங்கினார் அருணாச்சலம் வாத்தியார் "வரலாறு நடந்தவற்றை சொல்வது.

அது கட்டமைக்கப் படுவதில்லை. கற்பனைக்கு அங்கே இடமில்லை கோபு. மனிதனின் கடந்த காலத்தைப் பற்றி கற்பதற்கு இருக்கும் ஒரே பாடம் வரலாறு. நீமட்டுமல்ல பெருவாரியான மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தை ஒரு அவசியப் பாடமாக்க கருதுவதில்லை, கணக்குப் பாடத்திற்கு சரியான விடை போதும், அறிவியலுக்கு மூலக்கூறுகள் போதும், மொழிப் பாடத்திற்கு இலக்கணம் போதும், ஆனால் வரலாறு மட்டுந்தான் ரத்தமும் சதையுமான வாழ்க்கையைச் சொல்லும், மனிதனின் வீழ்ச்சியையும் எழுச்சியையும் எழுப்பிக் காட்டும். வரலாற்றிலிருக்கும் உண்மைகளை அறியும்போதுதான் புரட்சியும் மலர்ச்சியும் உயிர் பெறும். மானுடத்திற்கு அடையாளம் இருக்கின்றது, அந்த அடையாளத்தை வரலாறு காவல் செய்கின்றது..." இப்படி இன்னும் சொல்லிக்கொண்டே போனார். அமைதியாகச் செவியுற்றான் கோபாலன்.

வீட்டுக்குத் திரும்பிய அருணாச்சலம் வாத்தியாரை அவர் மனைவி காஃபிக் கோப்பையோடு வரவேற்றாள். உடற்சோர்வு நீங்க குளியலொன்றை ரசித்துவிட்டு தன் அறைக்கு வந்தார். எளிய மேசைக்கு எதிர்ச்சுவற்றில் பொறுத்தியிருந்த குழல்விளக்கை ஒளிரச்செய்தார். நாற்காலியில் அமர்ந்து அடுத்த நாள் வகுப்புகளுக்கான பாடங்களுக்கு குறிப்பெடுக்க நாள்காட்டியைத் திருப்பினார்.

மனக்குழப்பம் மேலிட மந்திரித்துவிட்ட கோழியென வீட்டில் அலைந்து கொண்டிருந்தான் கோபாலன். அவன் பெற்றோருக்கு இது புதிதாக இருந்தது. மகனின் விநோதச் செயலால் அன்று நடந்ததென்ன என்பதை அறிய முற்பட்டார் அப்பா. "என்னடா கோபு, நேத்தும் குழப்பமா இருந்த, இன்னிக்கும் அப்படியே இருக்க. நேத்து விடைத்தாள் கொடுத்தாங்க அதனால உன் முகம் வாட்டமா இருந்துச்சு, இன்னிக்கு என்ன?"

"இன்னிக்கு அருணாச்சலம் சார் பேசுனது எனக்கு புரியலப்பா?"

"அப்படியென்ன பேசினார்?"

"நேத்து அடிக்கிறார், இன்னிக்கி உணவகம் கூட்டிட்டு போய் டீ வாங்கித்தறாரு? என்னென்னமோ பேசுறாரு."

"இதுதானா உன் குழப்பம்? அவர் உன்மேல கோபப்பட்டு அடிக்கலடா... உன் மேல உள்ள அக்கறையினால அடிசிருக்காரு."

அப்பாவுக்கும் மகனுக்குமிடையே நடந்துகொண்டிருந்த உரையாடலில் அம்மாவும் தன் பங்கைச் செலுத்தினார், "அவர் என்ன பேசினார்?"

"வரலாறு, வாழ்க்கையைச் சொல்வது. அதில் உண்மை மட்டுந்தான் இருக்கணும்

கற்பனைக்கும் பொய்களுக்கு அங்க இடமில்லை அப்படீன்னு இன்னும் என்னென்னவோ சொல்றார்", என்று அம்மாவின் கேள்விக்கு பதிலளித்தான் கோபாலன்.

"உண்மைதானேடா கோபு", என்று ஆசிரியருக்கு ஆதரவாக கை உயர்த்திய அம்மா தொடர்ந்தார். "நேற்றைய உண்மை இன்றைய வரலாறு, இன்றைய உண்மை நாளைய வரலாறு. வரலாறு புனையப்பட்டால் வருங்கால மனித வாழ்க்கை கூனிப்போகும் குழம்பி வாடும்" என்ற அம்மா சிவகாமியின் கூற்றைக்கேட்டு அப்பா தன் பங்குக்கு கேள்வியை வைத்தார்.

"அப்படீன்னா இன்று வரலாறுன்னு நாம் படிக்கறதெல்லாம் உண்மைன்னு சொல்றியா சிவகாமி?"

"அப்படி உறுதியாச் சொல்லிவிட முடியாது... நம்மிடம் வரலாற்றைக் கொண்டுவந்து சேர்ப்பவர்களின் சுயநலத்தைப் பொருத்து அதன் உண்மைத்தன்மை அமைந்துவிடுகின்றது", என்று ஓரிரு கணங்கள் யோசித்துவிட்டுத் தொடர்ந்தார் சிவகாமி, "ஒவ்வொரு தலைமுறையும் தலைவர்களின் ஆணைப்படி வாழ்ந்து கடந்து வருகின்றார்கள். எல்லாத் தலைவர்களும் உண்மையைத்தான் பதிய வைத்திருக்கின்றார்கள் என்று சொல்லமுடியாதுதான்... இருந்தாலும் உண்மையைக் கண்டறிந்து செயல்படுவது எளிய மனிதனின் கடமை", என்ற சிவகாமியை ஆச்சரியமாகப் பார்த்தார் அப்பா சண்முகம். அடுப்படிக்குள் வேகும் மனைவியிடம் இத்தனை ஒளிப்பிழம்பா என்பதுதான் அந்தப்பார்வையின் அர்த்தம்.

"வாத்தியார்தான் குழப்புறார்னு நினைச்சேன், நீங்க ரெண்டுபேரும் அவருக்கு மேல என்னைக் குழப்பறீங்க", என்ற மகனின் பதிலைக்கேட்டு சிவகாமியும் சன்முகமும் மெல்லிய நகை பூத்தனர். "ஒண்ணு புரிஞ்சுக்கிட்டேன், இப்போதைய தேவை எனக்கு நல்ல மதிப்பெண், அதற்கு நான் இன்னும் உழைக்கணும்", என்று கூறி பாடம் படிக்கப் புறப்பட்டான் கோபாலன்.

மறுநாள் காலையில் அலுவலகத்திலிருந்து பள்ளிக்கூடத்திற்கு தொலைபேசித் தொடர்பு கொண்டார் சண்முகம். மறுமுனையில் ஒலித்துக்கொண்டிருந்த தொலைபேசியை யாரோ அணுகியதை உணர்ந்தவுடன், "ஹெலோ அருணாச்சலம் சார்கிட்ட பேசலாமா?" என்றார் சண்முகம். "ஒரு நிமிடம் காத்திருங்கள் ஐயா" என்றது மறுமுனைக் குரல். சொன்ன ஒரு நிமிடத்திற்குப் பின் மறுமுனைக் குரல் மீண்டு பேசத் தொடங்கியது. "வணக்கம், அருணாச்சலம் சார் வகுப்பில் இருக்கார். எதாவது அவசரமா?"

"இல்ல... சாதாரண அழைப்புதான்... எத்தனை மணிக்கு அழைக்கலாம்?" என்று கேட்டார் சண்முகம்.

"ஐயா மூணு மணிக்கு மேல பணியாளர்கள் அறையில இருப்பார். அப்போ கூப்பிடறீங்களா?" என்றது மறுமுனை.

"நன்றி" என்று அழைப்பைத் துண்டித்தார் சண்முகம். சரியாக மணி மூன்று இருபதுக்கு மீண்டும் அழைத்தார். இப்போது அழைப்பில் வந்தார் அருணாச்சலம் வாத்தியார்.

"டே அருணாச்சலம், நேத்து அப்படி என்னடா சொன்னே... என் பையன்கிட்ட மாற்றம் வர்ற அளவுக்கு? கண்டிப்பா அவன் நல்லா படிக்க ஆரம்பிசுடுவான்னு நம்பறேன்" என்ற சண்முகம் தொடர்ந்து "உனக்கு நன்றி சொல்லத்தாண்டா அழைச்சேன்" என்றார்.

"நானா எதுவும் செய்யலடா, நம்ம வாத்தியாருங்க நமக்கு கத்துக்கொடுத்ததை அப்படியே கடைபிடிக்கறேன். நீ நன்றி சொல்லணும்னா அவங்களுக்குத்தான் சொல்லணும்" என்று சண்முகத்தின் நன்றிக்கு பதிலுரைத்தார் அருணாச்சலம் வாத்தியார்.

சண்முகம் மற்றும் அருணாச்சலம் வாத்தியார் இருவரும் ஒரே பள்ளியில் படித்து வளர்ந்தவர்கள். பள்ளிப்படிப்பிற்கு பின் இருவரும் அவரவர் விருப்பப்படி கல்லூரிப் படிப்பை மேற்கொண்டனர். பொருளாதாரத் தேடலில் அருணாச்சலம், அவர் படித்த பள்ளியிலேயே ஆசிரியரானார். சண்முகம் அரசாங்க உத்தியோகத்தை அடைந்தார்.

அன்றையதினம் பள்ளியிலிருந்து தமது வண்டியில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார் அருணாச்சலம் வாத்தியார். கருவேலங்காட்டுப் பாதையில் வண்டி சென்று கொண்டிருந்தது. இருபுறமும் மரங்கள் நிறைந்த மண்சாலையில் தூரத்தில் யாரோ கை காட்டுவது தெரிந்தது. அவரருகில் சென்று வண்டியை நிறுத்தி இறங்கினார். கை காட்டியது தாம் வகுப்பெடுக்கும் மாணவர்களில் ஒருவன் என்பதையறிந்து "என்னடா நரேந்திரா இந்த நேரத்துல இங்க..." என்று கேட்ட அடுத்த நொடி பின்புறமிருந்து அவரது முழங்காலுக்கு கீழே இரண்டு கால்களிலும் ஒரே நேரத்தில் பலமான அடி விழுந்தது. என்ன நடக்கின்றது என்பதையுணர அவருக்கு சில மைக்ரோ நொடிகள் தேவைப்பட்டது. உணர்ந்து திரும்பிய போது அங்கே இரண்டு முரடர்கள் கைகளில் கனத்த தடியுடன் நின்றிருப்பதைக் கண்டார். மீண்டும் அருணாச்சலம் வாத்தியார் சுதாரிப்பதற்குள் வாத்தியாரின் கால்களில் தடியடி மாறி மாறி அடைமழைபோல் இறங்கியது. வலிபொறுக்க முடியாத அருணாச்சலம் வாத்தியார் கத்திக்கொண்டு மண்ணில் சாய்ந்தார். வண்டியும் மறுபுறம் சாய்ந்தது. முரடர்களும் மாணவனும் வேறெவரும் கவனிப்பதற்குள் அவ்விடத்தைவிட்டு மின்னல் வேகத்தில் காட்டுக்குள் ஓடி மறைந்தனர்.

மறுநாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அருணாச்சலம் வைத்தியரை நலம் விசாரிக்கச் சென்றார் சண்முகம். கால்களிரண்டில் பலமான வெள்ளைக் கட்டுகளுடன்

படுக்கையில் சாய்ந்திருந்த அருணாச்சலம் வாத்தியரைக் கண்டு மனம் வருந்தினார் சண்முகம் "மாணவனே இப்படி செஞ்சதா சொல்றாங்க... உண்மையா?"

கட்டாயப் புன்னகையை உதடுகளில் பொருத்திக்கொண்டு பதிலளித்தார் அருணாச்சலம் வாத்தியார். "உண்மைதாண்டா, வழக்கமா தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களை அடிக்கற மாதிரிதான் அந்தப் பையனையும் அடிச்சேன். வகுப்பு மாணவர்கள் மத்தியில அடிச்சது அவனுக்கு அவமானமாப் போச்சாம், இரண்டு முரடர்களை கூடி வந்து என்னைப் பழி வாங்கிட்டான். பள்ளிக்கூடம் அவன் மேல நடவடிக்கை எடுக்கறதா சொன்னாங்க. மாணவன் எதிர்காலம் பாதிக்க வேண்டாமேன்னு நடவடிக்கை வேணாம்னு சொல்லிட்டேன்".

"இப்படிப்பட்ட பசங்களால வருங்காலம் பாதிப்படையுமோன்னு பயமா இருக்கு."

"ஆசிரியர்கள் பிள்ளைகளை அடிக்கறதுல சில பெற்றோருக்கும் உடன்பாடு இல்லைன்னு கேள்விப்படுறேன். ஆனா அடி உதவுற மாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டாங்கன்னு நமக்கு சொல்லி வளத்திருக்காங்க. மோசமா அடிக்கக்கூடாது என்பதை ஒத்துக்கறேன். லேசாகத் தட்டுவதும் கூடாதுன்னா சமூகம் என்னவாகும்? எதிர்காலத்துல பசங்களை அடிக்கக்கூடாதுன்னு சட்டம் வந்தாலும் வரும்."

ஓரிரு வாரங்களுக்குப் பிறகு அருணாச்சலம் வாத்தியாரை அலுவலர் அறையில் சந்தித்தான் கோபாலன். தயங்கித் தயங்கி அவரருகில் வந்து நின்றான். "ஐயா உங்ககிட்ட மன்னிப்பு கேட்கத்தான் வந்தேன்" என்றுகூறித் தொடர்ந்தான், "ஐயா நீங்க பேப்பர் கொடுக்கும்போது லேசாத்தான் தட்டினீங்கா நான்தான் வேணும்னே அடி பலமா விழுந்த மாதிரி நடிச்சேன்" என்றவனை தோளில் தட்டிக்கொடுத்து புன்னகைத்தார் அருணாச்சலம் வாத்தியார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அருணாச்சலம் வாத்தியார் சொன்னதுபோல அந்த நாளும் வந்தது. பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் மாணவர்களை அடிக்கக்கூடாது என்ற சட்டம் அமலாக்கப்பட்டது. மாணவர்களுக்கு கொடுக்கும் உடல்தண்டனை அவர்களுக்கு மன உளைச்சலை உருவாக்குகிறது என்பதும் காரணமாகச் சொல்லப்பட்டது.

இப்பொழுதெல்லாம் மாவட்டத்தில் தமது பள்ளியின் படிநிலை குறித்து அருணாச்சலம் வாத்தியார் பெருமைப் பட்டுக்கொள்ள வாய்ப்பில்லாமல் போனது. அவர் வீட்டின் பின்புறத் தோட்டத்தில் பழ மரங்களும் மலர்ச்செடிகளும் செழித்து நிறைந்திருக்கின்றன. தோட்டத்து வேலியான ஊமத்தை செடிகள் ஓங்கி வளர்ந்து மண்டிக் கிடக்கின்றது.

- மீ. மணிகண்டன்,

டெக்சாசு, அமெரிக்கா.

# மூட்டை மூட்டையாய்

நெல்மணிகள்,
முளைவிடக் காத்துக்கிடக்கின்றன...
பீர் உற்பத்தியாளனின்
வருகைக்காக!

## புல்லின் நுனியில்

தன்னை நிறுத்தியது
பனித்துளி!
மனிதனுக்குத்தான்
தன்னை எங்கு நிறுத்துவது
என்பதில்... அத்தனை குழப்பம்!

## அலுவலகம் வந்தும்

இல்லத்தரசியாகவே
வாழ்பவளுக்கு...
மழை ஒருபோதும்
இரசனைக்கானது அல்ல!
அது,
வீட்டில் காயப்போட்ட துணிகளை
எடுக்கச் சொல்லும்...
எச்சரிக்கை தான்!

## நீண்டதொரு

காதல் கடிதத்தை,
உனக்காக எழுத நினைக்கையில்...
உன் செல்லப்பெயரோடு
முடிந்துவிடுகிறது கடிதம்!
சுருங்கச் சொல்லி
விளங்க வைத்திட,
இதைவிடப் பெரிது
வேறெதுவும் இல்லையே!

## முகூர்த்த நாட்களில்

## எல்லாம்,

ஆடம்பரப் பொருளாக
மகுடம் தரித்திடும்
மலர்களை எல்லாம்...
வன்மையாகக் கண்டிக்கிறேன்!

ஏனெனில் அது,
என் பெண்மையின் கூந்தலுக்குச்
சிக்கனத்தைக் கற்றுத்தருகிறது!

## கூட்ட நெரிசலில்

பக்தர்கள் இறப்பு...
எந்தக் கணக்கில்
வரவு வைப்பதென,
இறைவன் தவிப்பு!

## நியாய விலைக் கடைத்

தராசுகளுக்கு
ஈர்ப்பு விசை அதிகம்!
அவனைப் போலவே...
கவிழ்ந்து பார்த்தே
எடை இழக்கச் செய்கிறது!

## மழையை இரசித்திட,

தேநீரையும் நொறுக்குத்தீனியையும்
தேடுகிறேன் நான்!
காய்கறிக்கூடையைச்
சுமந்தபடி, வாடிக்கையாளரைத்
தேடுகிறாள் பாட்டி!

## கடவுளுக்கு மட்டும்

மனிதன் கூடுதல் கவனம்
செலுத்துவான்...

மரியாளின் மகனுக்கு
மூன்று ஆணிகளையும்,

மரித்தவர்கள் ஆவிக்கு
ஒற்றை ஆணியும்
வழங்கியது போல!

## கம்பளிக்காக

உரோமங்களை அளித்திடும்
ஆடுகளுக்குத் தெரிந்திருக்க
வாய்ப்பில்லை...
உரோமங்களின் கதகதப்பு பற்றி!
காசுக்காக வாக்குகளை
விற்றுவிடும்
வாக்காளனைப் போல!

- ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்,
செங்கோட்டை.

---

# எண்ணூறு குலவை

பரிச சேலையை வைக்கும்
நார்ப்பேழையை
சுமந்து கொண்டு
ஒரு சிறுமி வர
மற்ற சிறுமிகள் எல்லாம்
அவளைச் சூழ்ந்துகொண்டு
வருவார்கள்
முளை தாண்ட
வரி வசூல் செய்ய

பயறு சிறுபயறு
காரா மணிபயறு என்ற பாடலை
அனைவரும் பாடிக்கொண்டே
வருவார்கள்

நம்மூரு மாரியாத்தா
பட்டறையைத் திறந்து
படியளக்க வாரா
என்று பாடல் வரிகள் தொடரும்

இருபத்தொரு
மஞ்சள் கிழங்குகள்
எண்ணூறு குலவைகள்

எல்லாம் பண்டமாக இருந்த காலத்தில்
பணம் என்பதே இல்லை

அதனால்தான் சிறுமிகள்
இன்னும் கேட்கிறார்கள்
நாட்டில் விளைந்த
நல்ல பண்டம்
புதுப்பண்டம்

பயறுகள் வாங்கி
முளை தாண்டி விட்டால்
அழகாக வளர்வது
அவள் பாவம்
தினம் நீர்ஊற்றி
வளர்ப்பவர்கள் எல்லாம்
செல்வ முளைமாரிகள்
செல்வ முளைப்பாரிகள்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி - 626102

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.